## ‘சங்கி’ அமைச்சரின் போலி சாமியாட்டம்!

# கச்சத்தீவு: கலைஞர் எதிர்கொண்ட சவால்களும் கிடைத்த வெற்றியும்!

இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே பாக்ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் 21சின்னஞ்சிறிய குட்டித்தீவுகள் உள்ளன. அதில் ஒன்று தான் வளம் கொழிக்கும் கச்சத்தீவு. இது ராமேஸ்வரத்தில் இருந்து 12 மைல் தொலைவில் உள்ளது.

சுமார் 1 மைல் நீளம், ஆயிரம் அடி அகலத்துடன் 297 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இந்த கச்சத்தீவிலும் அதை சுற்றிய கடல் பகுதியிலும் இயற்கை வளங்கள் கொட்டிக்கிடக்கின்றன. அள்ள அள்ள குறையாத மீன் வள பகுதியாக கச்சத்தீவு உள்ளது.

கச்சத்தீவு ராமநாதபுரம் சேதுபதி மன்னர்களுக்கு சொந்தமானதாக இருந்தது. இங்கு கிடைக்கும் பல்வேறு மூலிகைகளின் சாய வேர் மற்றும் பச்சிலைகள் ஆகிய வற்றை பெற முகமது காதர் மற்றும் மரைக்காயர், முத்துச்சாமி பிள்ளை ஆகிய வணிகர்களுக்கு சேதுபதி மன்னர் 5 ஆண்டு காலம் குத்தகைக்கு வழங்கி இருந்தார். (ஆவணம் ராமநாதபுரம் துணைப்பதிவாளர் அலுவலக ஆவண எண்.510/70)

இந்த தீவு பகுதியில் கசப்பான தண்ணீர் கிடைப்பதால், இது கச்சத்தீவு என்று அழைக்கப்படுகிறது. இந்த தீவில் வளரும் தாவரங்கள், வேர்கள், அபூர்வ மூலிகைகள் ஆகியவற்றை சேதுபதி மன்னர்கள் 1840ஆம் ஆண்டு முதலே குத்தகைக்கு விட்டு வந்துள்ளனர்.

ஆண்டாண்டு காலமாக ராமநாதபுரம் மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்த கச்சத்தீவு பகுதி 1947ல் ஜமீன்தார் ஒழிப்புச்சட்டத்தின் மூலம் இந்திய அரசுக்கு சொந்தமானது. 23.6.80, 4.12.85, 1974ஆம் ஆண்டு ஆவணங்களும், கடிதங்களும், 1911ஆம் ஆண்டு சமஸ்தான பட்டியலும், 21.10.1921 கொழும்பு பேச்சுவார்த்தையும் சேதுபதி மன்னர்களின் கச்சத்தீவு உரிமையை உறுதிப்படுத்துகின்றன.

1954ஆம் ஆண்டில் இலங்கை சர்வே படத்தில் கச்சத்தீவு இல்லை. 1957, 1966ஆம் ஆண்டின் ராம நாதபுரம் ஆவணப்பதிவு ஏடுகளில் தனுஷ்கோடியின் உட்கிராமமாக கச்சத்தீவு, ராமனதீவு ஆகிய 2 பகுதிகள் குறிக்கப்பட்டுள்ளன.

100 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியர்கள் இந்த வழியாக நடந்தே இலங்கைக்கு சென்று இருக்கிறார்கள். இதுதவிர, கச்சத்தீவு பகுதியில் நீண்ட நெடுங்காலமாக இந்தியர்களும், இலங்கை மீனவர்களும் இணக்கமாகவே மீன்பிடித்தொழில் செய்து வந்தனர்.

இருநாட்டு மீனவர்களும் கச்சத்தீவை ஓய்வெடுப்பதற்கும், மீன்பிடி வலைகளை உலர்த்துவதற்கும் பயன்படுத்தி வந்தனர். 2ம் உலகப்போரின் போது வெள்ளைக்காரர்கள் கச்சத்தீவை யுத்த தளவாடங்கள் இருப்பு வைக்கும் பகுதியாக பயன்படுத்தினர். வெடிகுண்டுகள், பீரங்கிகள் போன்ற யுத்த தளவாடங்களை அங்கே வைத்திருந்தனர். அந்த அளவிற்கு தேச பாதுகாப்பு கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக கச்சத்தீவு உள்ளது.

கடந்த 1968ல் கச்சத்தீவு யாருக்கு சொந்தம்? என்ற கேள்வி எழுந்த போது அப்போதைய ராமநாதபுரம் ராஜாவும், முன்னாள் அமைச்சருமான சண்முக ராஜேஸ்வர சேதுபதி, **“கச்சத்தீவு ராமநாதபுரம் எல்லைக்கு உட்பட்டது”** என்று கூறி ஆவணங்களையும், அதற்கான தஸ்தாவேஜுக்கள் போன்றவற்றையும் தமிழக அரசிடம் ஒப்படைத்தார்.

அப்போதைய அரசு அவற்றை பெற்றுக் கொண்டு கச்சத்தீவு தமிழகத்திற்கு சொந்தமானது என்று அறிவித்தது. ராமநாதபுரம் மன்னர் சேதுபதியின் ஆட்கள் இந்த தீவில் 1802ஆம் ஆண்டு வரை முத்துக்குளித்து வந்தனர். கிழக்கு இந்திய கம்பெனியின் வேண்டுகோளை புறக்கணித்து, **“இந்து மீரார் சமத்”** உடன்பாட்டின்படி ஆங்கிலேயே அரசு சேதுபதி மன்னர்களின் உரிமையை தொடர்ந்து ஏற்றது. விக்டோரியா மகாராணி இதை உறுதி செய்துள்ளார்.

இச்சூழ்நிலையில் 02.09.2026ல் சட்டப்பேரவையில் சங்கி அமைச்சர் கச்சத்தீவை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது என்று திரும்பத் திரும்ப உண்மை இல்லாததை பதிவு செய்து, நாடகம் ஆடியிருக்கின்றார்.

**ஆனால் உண்மை நிலை என்ன?**

1974ஆம் ஆண்டு ஜூன் மாதம், 27ஆம் தேதி அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மாநில அரசை கலந்து ஆலோசிக்காமல் கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்தது தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவு.

ஒன்றிய அரசின் அறிவிப்பையொட்டி 1974ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 29ம் தேதியன்று சென்னை தலைமைச் செயலகத்திலேயே அனைத்து கட்சித்தலைவர்களை அழைத்து அவர்களோடு பேசி அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் அன்றைய பிரதமருக்கு கலைஞர் அவர்கள் கடிதம் எழுதினார்.

**Dear Prime Minister,**

**On behalf of the Government of Tamil Nadu and on behalf of the people of Tamil Nadu. I am Constrained to express our deep sense of disappointment over the recent. Indo - Sri Lanka Agreement, according to which, Sri Lank’s claim to ketchativu has been conceded by the Government of India. May I express the hope that you will take into consideration the unanimous decision contained in the Resolution and take appropriate action?** (22.06.2009ல் முரசொலியில் கலைஞர் எழுதிய கடிதத்தில்) இதனை ஒட்டி 21.08.1974 அன்று சட்டப்பேரவையில் முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தியாவிற்கு சொந்தமானதும், தமிழ்நாட்டிற்கு நெருங்கிய தொடர்புடையதுமான கச்சத்தீவு பிரச்சனையில் மத்திய அரசு எடுக்கும் முடிவு பற்றி இந்த பேரவை தங்களுடைய ஆழ்ந்த வருத்;தத்தை தெரிவிப்பதோடு, மத்திய அரசு இந்த முடிவினை மறுபரிசீலனை செய்து இலங்கை அரசோடு செய்துள்ள ஒப்பந்தத்தை திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று தீர்மானம் முன்மொழிந்து நிறைவேற்றப்பட்டது.



**கம்பம் நா.இராமகிருஷ்ணன்**
*தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்*

14.07.1977ல் தமிழகம் முழுவதும் கழகத்தின் சார்பில் கச்சத்தீவு ஒப்பந்த கண்டன நாள் கூட்டங்கள் நடத்தியும், அன்றைய வெளியுறவுத்துறை அமைச்சர் சுரன் சிங் அவர்களிடம் கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்க்கக் கூடாது என்றும் தலைவர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

கச்சத்தீவை பற்றி வாய் கிழிய பேசும் சங்கி அமைச்சர் சட்டப்பேரவையில் போலி சாமியாட்டம் ஆடியவர் 1977ல் இருந்து 25 ஆண்டு காலம் ஏன் அதிமுக அரசு ஆட்சியில் இருந்த போது கச்சத்தீவை மீட்கவில்லை என்று கேட்பதற்கு தைரியம் உண்டா?

1991ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் அம்மையார் அவர்கள் தனது சுதந்திர தின உரையில், நம் தாயகத்திற்கு சொந்தமான கச்சத்தீவை இலங்கை அரசுக்கு தாரை வார்த்த காரணத்தால், நம் மீனவர்கள் தங்களுடைய வலைகளைக்கூட உலர்த்திக் கொள்ள அந்த தீவு அருகில் நெருங்கக் கூட முடியாத நிலை உள்ளது.

எனவே, ஒன்றிய அரசிடம் வாதாடவும், தேவைப்பட்டால் போராடவும் தயார் என்று குறிப்பிட்டு மேலும் எங்களுடைய தேர்தல் அறிக்கையில் இதுகுறித்து அறிக்கை வெளியிட்டு இருக்கின்றோம்.

03.10.1991ஆம் தேதியன்று சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, அதைப்போல 20.04.1992 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அன்றைய முதல்வர் அம்மையார் பேசும் போது கச்சத்தீவை மீட்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டது, 30.09.1994ல் முதலமைச்சராக இருந்த அன்றைய முதல்வர், அப்போதைய பிரதமர் மாண்புமிகு நரசிம்மராவ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, அதில் The ceding of this tiny island to the Island Nation had been done by the Government of India in the interest of better bilateral relations அதாவது தீவு நாடான இலங்கைக்கு இந்த சின்னஞ் சிறிய தீவை இந்திய அரசு பிரித்துக் கொடுப்பது இந்தியாவிற்கும், இலங்கைக்கும் நல்லுறவு நிலவிட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

18.06.2009ல் தி.மு.க. ஆட்சியின் போது கச்சத்தீவு தொடர்பாக அலுவல்களை ஒத்;தி வைத்து பேசுகின்ற பொழுது உறுப்பினர்கள் ஜெயக்குமார், கோ.கா.மணி, சிவபுண்ணியம், ரவிக்குமார் எல்லோரும் கச்சத்தீவை இந்தியாவிற்கு திரும்ப பெற வேண்டுமென கருத்தையே தெரிவித்தனர். அதையொட்டி தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றிய பொழுது கச்சத்தீவை தாரை வார்க்க தி.மு.க. ஒப்புக் கொள்ளவில்லை. ஒருபோதும் உடன்படவும் இல்லை. அனைத்து கட்சியினரும் ஆதரிக்கத் தயாரென உறுதியளித்தால் கச்சத்தீவை திரும்பப் பெற அவையிலேயே தீர்மானம் கொண்டு வரத் தயாராக உள்ளது எனவும் தெரிவித்தார்.

1974ல் கச்சத்தீவை மத்திய அரசு தாரை வார்த்த வேளையில், கச்சத்தீவில் மீன்பிடிக்கும் உரிமை, யாத்திரை செல்கின்ற உரிமை, மீன் வலைகளை காய வைப்பதற்கான உரிமை இவைகள் எல்லாம் மீனவ மக்களுக்கு உண்டு என்கிற ஷரத்து ஒப்பந்தத்திலேயே சேர்க்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தியதால் சேர்க்கப்பட்டது.

நெருக்கடி நிலை காலத்தில், கவர்னர் ஆட்சி நடைபெற்ற நேரத்தில் அந்த சரத்து பறி போய்விட்டன. இன்று வரைக்கும் அந்த ஷரத்துகளையாவது சேர்க்க வேண்டுமென்று வாதாடிக் கொண்டுள்ளது.

கச்சத்தீவு குறித்து வரலாற்று சம்பவங்கள், நிகழ்வுகள் போன்ற உண்மைநிலை இருக்கின்ற பொழுது சட்டப்பேரவையில் சங்கி அமைச்சர் போலி சாமியாட்டம் ஆடி கலைஞர் மீது பழிபோடுவதையே குறியாக கொண்டு உரையாற்றியது. மீனவர்களை திசைதிருப்ப பயன்படுமே தவிர, தி.மு.க.வையோ, கலைஞர் அவர்களையோ எந்த பாதிப்பும் ஏற்படுத்தாது.

1974, ஜூலை 23 அன்று இலங்கை உடன்படிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க வெளியுறவுத்துறை அமைச்சர் சுவரன் சிங் முன் வந்த போது, நாடாளுமன்ற தி.மு.க. தலைவர் அதை எதிர்த்து பேசிய போது,

**“இந்த உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கு முன்னதாக இந்த நாடாளுமன்றத்தையும், சம்பந்தப்பட்ட மற்றவர்களையும் அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடன் கலந்து ஆலோசித்திருக்க வேண்டும். இந்தியாவில் ஒரு பகுதியை மற்றொரு நாட்டிடம் ஒப்படைப்பது என்பது மிகக் கீழ்த்தரமான செயலாகும். அன்டை நாடான இலங்கைத்தீவுடன் நட்புறவுடன் இருக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தையும், இறையாண்மை உரிமைகளையும் உதறித் தள்ளுவது சரியல்ல. இது எந்த அரசாங்கத்தாலும் நினைத்துப் பார்க்க முடியாத கேவலமான, படு மோசமான பாதகச் செயலாகும். இந்தக் கீழ்த்தரமான உடன்படிக்கையைச் சிறுதுளியும் ஏற்றுக் கொள்ளாத நாங்கள் அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் வெளியேறுகிறோம்”** என்று கூறினார்.

1975, ஜூன் 25ம் தேதி நெருக்கடி கால பிரகடனத்தின் கீழ் அடிப்படை உரிமைகள் ஒடுக்கப்பட்ட நிலையில், நாடாளுமன்றத்தில், எதிர்க்கட்சியினரால் கச்சத்தீவு உள்பட்ட பல சீர்கேடுகளையும் சுட்டிக்காட்ட முடியவில்லை. 1974ல் உடன்படிக்கை போதாதென்று 1976 மார்ச் 23ம் தேதி மற்றொரு உடன்படிக்கையின் மூலம் மன்னார் வளைகுடாவில் உள்ள வட்கே பாங்க் பகுதியில் மூன்றாண்டு காலத்திற்கு மீன் பிடிக்கும் உரிமையை இலங்கை மீனவருக்கு வழங்கியதுடன், மூன்றாண்டு காலத்திற்குப் பிறகு ஆண்டுக்கு 2000 டன் அளவுக்கு உயர்தர மீன்களை இலங்கைக்கு உடன்பாடான விலையில் விற்க இந்தியா ஒப்புதல் அளித்தது. இரண்டாவது உடன்படிக்கையை போட்ட பொழுது தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. அரசு கலைக்கப்பட்டு, குடியரசுத்தலைவரின் ஆட்சியின் கீழ் ஒன்றிய அரசு நேரடியாக மாநில நிர்வாகத்தை கட்டுப்படுத்தியது. ஆக தன்போக்கில் ஒன்றிய அரசு இலங்கை அரசுக்கு தமிழ்நாட்டு உரிமைகளை அடிமைப்படுத்துவது தொடர்ந்தது.

கச்சத்தீவை மீட்க வேண்டும் என்ற அதிமுக அரசின் கோரிக்கை 2001, மார்ச் 25ல் ஆளுநர் உரையில் குறிப்பிடத்தக்கது. அதனையொட்டி எழுந்த பிரச்சினைக்கு எதிர்ப்பாக மே 2ல் இலங்கை அமைச்சர் ஒருவர் கூறிய ஆங்கில அறிவிப்பு:

**“It is impossible to give it (Katchatheevu) back to them as it has been recognized by the International community as an integral part of our country since it was handed over by late Indra Gandhi”**

இந்த அறிவிப்பை வெளியிட்டவர் யார் தெரியுமா? இலங்கையின் அப்போதைய மீன்வள மற்றும் கடல் துறை அமைச்சராக இருந்த மகிந்த ராஜபட்சே என்பவர் பின்னாளில் அவர் தான் இலங்கையின் குடியரசுத் தலைவராகவும் இருந்தார். எந்த ஆதாரத்துடனும் கச்சத்தீPவை இலங்கை பெறவில்லை என்பதுடன், **இந்திராகாந்தி பார்த்து இலங்கைக்கு கொடுத்தது தான் கச்சத்தீவு என்பதை இலங்கையின் குடியரசுத்தலைவரே நேரடியாக ஒப்புக் கொண்டுள்ளார்.**

தொடக்கத்திலிருந்து இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கும் பொழுது, சட்டத்தை மீறி, நாட்டு மக்களின் விருப்பத்திற்கு எதிராக, தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்திற்கு எதிர்ப்பாக, தமிழ்நாட்டு மக்களின் மீனவர்களின் வேண்டுகோள்களை மீறி எவ்வித அடிப்படையும் இல்லாமல் கச்சத்தீவை இந்திய அரசாங்கம் இலங்கையிடம் ஒப்படைத்தது முற்றிலும் தவறான ஒன்று என்பது தெரிகிறது.

சட்டமன்றத்தில் பல காலகட்டங்களில் கலைஞர் அவர்கள் கச்சத்தீவை திரும்பப் பெற வேண்டும் என்று தீhமானம் நிறைவேற்றியும், தமிழ்நாடு முழுவதும் இது குறித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டும், நாடாளுமன்றத்தில் கச்சத்தீவை இலங்கைக்கு அன்றைய பிரதமர் திருமதி.இந்திராகாந்தி அவர்கள் தாரை வார்த்தது இந்தியாவின் இறையாண்மைக்கும், இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கும் எதிரானது என்று கண்டனம் தெரிவித்து, கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்ததும் வரலாற்று நிகழ்வுகள்.

முன்னாள் பிரதமர் திருமதி.இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் தன்னிச்சையாக கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்தது அப்பட்டமான உண்மை. தங்களுடைய அரசியல் விளம்பரத்திற்காக தி.மு.க.வின் மீது ஒரு தவறான பிம்பத்தையும், கட்டமைப்பையும் மீனவர்கள் மத்தியில் உருவாக்க சங்கி அமைச்சரின் சட்டப்பேரவை பேச்சு போலி சாமியாட்டம் என்பது மக்கள் உணர்வார்கள்.

---

### கடையநல்லூர் தொகுதி – மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் வனவிலங்குகளால்

# விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை தடுக்க அரசு முன்வருமா?

## சட்டப்பேரவையில் தி.மு.இராசேந்திரன் பேச்சு!

**சென்னை, செப். 7 - கடையநல்லூர் தொகுதியில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் வன விலங்குகளால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை தடுக்க அரசு முன் வருமா? என சட்டப் பேரவையில் தி.மு.இராஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.**


இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**தி.மு.இராசேந்திரன்:** கடையநல்லூர் தொகுதி, மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வனவிலங்குகளால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் ரா.வீ.இரஞ்சித் குமார்:** விவசாய நிலங்களைப் பாதுகாக்க கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளில் வனவிலங்குகள் விவசாய நிலங்களுக்குள் வராமல் தடுப்பதற்கு ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் செலவில் வன எல்லையோரம் 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய ஆற்றலில் இயங்கும் மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கும் காட்டுப் பன்றிகளுக்கும் இடையே ஏற்படும் மோதல்களை தடுக்க திறம்பட கையாளும் வகையில் வனப் பகுதிகளை சுற்றி யுள்ள விவசாயப் பயிர்களை காட்டுப் பன்றிகள் சேதப்படுத்துவதைத் தடுப்பதற்காக விரிவான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் வகுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.



**தி.மு.இராசேந்திரன்:** உங்களை இரண்டாம் சபாநாயகர் செல்லபாண்டியனாக பார்க்கிறேன். அப்படியென்றால், முதல் சபாநாயகர் செல்லபாண்டியன் உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டால், நான் பயின்ற மேலநீலிதநல்லூரில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரியோடு அவர் தொடர்புகொண்டவர். அடிக்கடி அவரைச் சந்தித்து பேசுகிற வாய்ப்பு எனக்கு கிடைத்தது உண்டு. அதுகுறித்து, உரியநேரத்தில் எனது உரை அமைகிறபோது பதிவுசெய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதியில் வன விலங்குகளின் நடமாட்டத்தால் வேளாண்மை பாதிக்கப்படுவது குறித்த எனது கேள்விக்கு தக்க விளக்கமளித்த வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது கோரிக்கையுடன்கூடிய வினா என்னவென்றால், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எல்லோரும் பார்த்திருப்போம். கோவை – பாலக்காடு இரயில் வழித்தடத்தில், இரயில் மோதி பல யானைகள் இறந்துகிடந்தன. அன்றைய முதலமைச்சர் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு கோவை–பாலக்காடு வழித்தடத்தில் மனிதயானை மோதல் நிகழாமலும், இரயில்யானை மோதல் நிகழாமலும் தடுப்பதற்கு 13 கிலோ மீட்டர் தூரம், இந்திய வனத் துறைச் சரித்திரத்திலேயே முதன் முறையாக முழு கோபுரங்களை அமைத்து, 24 மணிநேர கண்காணிப்பில் இயங்கக்கூடிய அதற்கு ஒரு கட்டுப்பாட்டு அறையையும் அமைத்தார்கள். இந்த மூன்றாண்டு காலங்களில் அங்கு யானை மனித மோதல் நிகழவில்லை என்றும், யானைஇரயில் மோதல் நிகழவில்லை என்றும் தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. வனத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு, அந்தத் திட்டம் சிறப்பாக இயங்குகிறதா என்பதை ஆய்வுசெய்து, இயங்குகிறது எனில் அதை முதற்கட்டமாக எங்கள் கடையநல்லூர் தொகுதியிலும், தென்காசி மாவட்டத்தில் 80 கிலோ மீட்டர் தூரமிருக்கின்ற மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதியிலும் அமல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு முன்வருமா என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுப் பன்றிகளின் தொல்லையால் விவசாயம் சீர்குலைந்திருக்கிறது; இயற்கை இடர், விளைச்சல் இன்மை, மழையின்மை, விலையின்மை ஆகிய நான்கு காரணிகள் தான் வேளாண்மைக்கு இடையூறாக இருக்கின்றன என்று சொன்னால், ஐந்தாவது காரணியாக சில ஆண்டுகளாகக் காட்டுப் பன்றிகள் வனப் பகுதிகளில் மட்டுமல்லாமல், சமவெளிப் பகுதிகளிலும் வந்து வேளாண்மையைச் சீர்குலைக்கும் அவலம் நேர்ந்திருக்கிறது. விவசாயிகளிடம் கேட்கும் போது அவர்கள் முன்வைக்கும் ஒரே கோரிக்கை, காட்டுப் பன்றிகளை வன விலங்குகளின் பட்டியலிலிருந்து அகற்றிவிட்டால் அதை நாங்களே அப்புறப்படுத்துவோம் என்பதுதான். ஆகவே, அரசு இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்ற, காட்டுப் பன்றிகளை வனவிலங்குகளின் பட்டியலிலிருந்து அகற்றுவதற்கு ஒன்றிய அரசிற்குத் தேவையான அழுத்தங்களைக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் ரா.வீ.இரஞ்சித் குமார்:** நம்முடைய தமிழ்நாட்டில் 23,188 சதுர கிலோ மீட்டர் வனப் பகுதி உள்ளது; சுமார் ஆயிரக்கணக்கான கிராமங்களில் வனத்தையொட்டிய விவசாய நிலங்கள் உள்ளன. இந்தக் காட்டுப்பன்றிப் பிரச்சினையால் தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாய நிலங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவது உண்மைதான்; அதற்கு விதிகள் உள்ளன. ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் வரை வெளியே வந்தால் வன அலுவலர்களிடம் தெரிவித்தால், அவர்கள் அதை காட்டிற்குள் விரட்டி அனுப்புவார்கள். மூன்று கிலோ மீட்டர் தூரம் வெளியே வந்தால் அதைச் சுடுவதற்கும் நம்முடைய தமிழக அரசு வனத் துறைச் சட்டத்தில் இடம் இருக்கிறது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தி.மு. இராசேந்திரன்:** வனத் துறை அமைச்சர் அவர்கள் கூறியது, கடந்த திராவிட மாடல் அரசில் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கிய அந்த உத்தரவுதான் தற்போது நடைமுறையில் இருக்கிறது. நீங்கள், காட்டுப் பன்றிகளை விலங்குகளின் பட்டியலிலிருந்து கரடி, சிங்கம், புலி இவையெல்லாம் விலங்குகளின் பட்டியலில் உள்ளன, அதை மனிதர்கள் அகற்ற முடியாது; அதுபோலவே, வேளாண்மையை அழிக்கின்ற காட்டுப் பன்றிகளும் அந்த வனவிலங்குகளின் பட்டியலில் இருப்பதால், அதை விவசாயிகளால் அப்புறப்படுத்த முடியாத நெருக்கடி உள்ளது. ஆகவே, காட்டுப் பன்றிகளை வனவிலங்குகளின் பட்டியலிலிருந்து அகற்றுங்கள் என்கிற அழுத்தத்தை ஒன்றிய அரசிற்குத் தமிழ்நாடு அரசு கொடுத்து, அந்தப் பட்டியலிலிருந்து எடுத்துவிட்டால், வேளாண்மைக்கு இருக்கின்ற பெருந்துயர் நீங்கும் என்பதைத் தெரிவித்து, தமிழ்நாடு அரசு அதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் ரா.வீ.இரஞ்சித் குமார்:** நம்முடைய தமிழக அரசு வனத் துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசித்து பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!

